# இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,

# திருப்பூர்.

| | | |
|---|---|---|
| **அ.வ.எண்.** | : | **193/2021** |
| **வா. சா.** | | **1** |
| **பெயர்** | : | கார்த்திகா |

---

**நாள்: 02.06.2025**

**சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம்: 11.29 am to 11.46 am**

**குறுக்குவிசாரணை**

நான் பாகப்பிரிவினை கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கின் ஏ அட்டவணை சொத்து வீரபாண்டி கிராமத்தில் உள்ளது, ஆனால் விஸ்தீரணம் ஞாபகம் இல்லை.என் தாத்தா ஆறுச்சாமி கவுண்டர் 20.3.2020 ஆம் தேதியில் இறந்தார். என் தாத்தா இறந்த பிறகு வாரிசு சான்றிதழ் வாங்கினோமா என்றால் இல்லை. என் அப்பாவுடன் பிறந்தவர்கள் ஒரு அண்ணன் மற்றும் ஒரு தங்கச்சி உள்ளார் அவர்கள் பெயர் தெரியாது. என்னுடைய பாட்டி பெயர் ஞாபகம் இல்லை என் பாட்டி உயிருடன் உள்ளார். தாவா ஏ அட்டவணை சொத்து என் அப்பாவின் ஊரில் சொத்து என்று குறிப்பிட்டுள்ள நிலையில் என் அப்பாவுடன் பிறந்த அவரது சகோதரர் மற்றும் சகோதரி மற்றும் எனது பாட்டியை சேர்க்காததால் இந்த வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காததால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கு முன்பு என் அப்பாவுடன் பிறந்த அண்ணன் மற்றும் அத்தை

எனது பாட்டி ஆகியோர்களுக்கு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா ஏ அட்டவணை சொத்தை என் அப்பா மற்றும் பெரியப்பா இருவரும் பிரிவினை செய்து கொண்டு தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். பட்டா என் அப்பா மற்றும் எனது பெரியப்பா பெயரில் தான் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

என் அம்மா பெயர் சத்தியவதி. என் அப்பாவிற்கும் என் அம்மாவிற்கும் நடந்த திருமணம் கோவை முதலாவது மாவட்ட நீதிமன்ற சி.எம்.ஏ. நம்பர் 4/ 2009 இன் படி விவாகரத்து ஆகிவிட்டது என்றால் சரிதான். அவ்வாறு விவாகரத்து பெரும் சமயத்தில் என் அப்பாவும் அம்மாவும் கூட்டாக தாக்கல் செய்த குறிப்பாணையில் ஜீவனாம்சத்திற்காகவும் சொத்திற்காகவும் என் பெயரில் இரண்டு லட்சத்திற்கான வங்கி வரைவோலையும், என் அம்மா பெயரில் மூன்று லட்சத்திற்கான வங்கி வரைவோலையும் பெற்றுக் கொண்டோம் என்று சொன்னால் அது என் அம்மாவிற்கு தான் தெரியும். அந்த இரண்டு வங்கி வரைவோலைகளும் திருப்பூர் கரூர் வைசியா வங்கியில் உள்ள என்னுடைய வங்கி கணக்கு மற்றும் என் அம்மாவுடன் வங்கி கணக்கில் வசூல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது என் அம்மாவுக்கு தான்

தெரியும். திருமணத்திற்கு பிறகு என் அம்மா பெயரில் என் அப்பா வாங்கிய 40 பவுன் நகைகளும் விவாகரத்து வாங்கிய தேதி அன்றே என் அம்மாவிடம் என் அப்பா ஒப்படைத்து விட்டார் என்றால் அது எனக்கு தெரியாது என் அம்மாவுக்கு தான் தெரியும். தாவா ஆ அட்டவணை சொத்து என் தாத்தா சுயமாக கிரயம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். அந்த சொத்தை என் தாத்தா என் அப்பா மற்றும் என் பெரியப்பா மீது தனித்தனியாக செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி அ அட்டவணை சொத்தில் கடைசியாக குறிப்பிட்டுள்ள சொத்தான நத்தம் புறம்போக்கு நிலத்தில் உள்ள வீடு என் தாத்தா பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ள சொத்து என்றும் அதனால் அது பூர்வீக சொத்து அல்ல என்று சொன்னால் எனக்கு தெரியாது.என் தாத்தா இறப்பதற்கு முன்பு அ அட்டவணை சொத்தை பொறுத்து மூன்றாம் நபர்களிடம் நிறைய கடன் பெற்று இருந்தார் என்றும் அந்த கடன்களை என் அப்பாவும் என் பெரியப்பாவும் தான் திருப்பி செலுத்தினார்கள் என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது.நான் எந்த காலத்திலும் தாவா சொத்திற்கு நேரில் சென்றதில்லை என்று சொன்னால் சரிதான் எனக்கு எதுவும் தெரியாது.இந்த வழக்கை யார் போடுமாறு என்னிடம் சொன்னார்கள் என்றால் நான் தான்

**02.06.2025 – அ.வ.எண்.193 /2021 – வா.சா. 1 கார்த்திகா**

சுயமாக போட்டேன்.அதனால் இந்த வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியில்ல.

Typed to my dictation as deposed by the witness in Open Court and acknowledged by him / her to be correct.

SRIDHAR CHINNASAMY

Digitally signed by SRIDHAR CHINNASAMY
Date: 2025.06.02 13:19:28 +0530

II Additional District and Sessions Judge,
Tiruppur.